1979 மார்ச் 20]

பட வேண்டும் என்றும், விலையை உயர்த்தாமல் இருக்க வேண்டும் என்றும் அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். அவர்களும் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி குறைபாடு இருந்தால் அதை நீக்குவதற்கு உணவு அமைச்சர், அவர்கள் முயற்சி செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: வருடத்திற்கு ஐந்து லட்சத்திற்கு மேல் வசூலாகக் கூடிய ஓட்டல்களை எல்லாம் 'எ' வகுப்பு ஓட்டல்கள் என்று பிரித்து, அவர்கள் எல்லாம் குறிப்பிட்ட இன்ன விலைக்கு குறைவாக உணவுப் பண்டங்களை விற்கக் கூடாது என்ற தடை இருக்கிறதாமே, அப்படியென்றால் அப்படி இருப்பது நியாயம் தானா? இப்படி குறைந்த விலையில் விற்கக் கூடாது என்றிருப்பதை தளர்த்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் உணவு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லுவார்கள்.

விடுதலை பெற்ற ஆயுட்கால சிறைவாசிகள்.

* வினா எண் 484—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் 1977–78-ம் ஆண்டில் சிறை அதிகாரிகளின் அறிவுரைக் கழகத்தினரால் விடுதலை செய்யக் கோரி பரிந்துரை செய்யப்பட்ட ஆயுட்கால சிறைவாசிகள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

The Hon. Thiru. NARAYANASWAMY ; (a) Four hundred and thirty one persons.

(b) One hundred and six persons.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையை பரிந்துரை செய்திருந்ததில் சிலர் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலரை விடுவிக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இதற்கான காரணத்தை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்: மேலும் ஆயுட்கால தண்டனை பெற்று திருச்சி மத்திய சிறைச்சாலையில் இருக்கின்ற சலவைத் தொழிலாளியான சிந்தாமணி என்கிற ரங்கசாமி என்பவர் 15 ஆண்டுக் காலம் 16 ஆண்டு காலம் சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார். இதுவரை

[1979 மார்ச் 20

அவருக்கு 19 நாட்கள் கூட பரோல் கிடைக்கவில்லை. மிசா காலத்தில் எஸ்கார்ட் போட்டு எங்களை எல்லாம் பத்து நாட்கள் பரோலில் அனுப்பியது போல் இவரையும் அந்த முறையிலாவது பரோலிலாவது விடுவதற்கு அரசு முன் வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : There are two supplementary questions put to me, Mr. Speaker, Sir, by the Hon. Member Thiru Kittappa. So far as the first question is concerned, my answer is this. The other cases have not been accepted because in some cases the period that has been recommended may be too long a period. There is another reason why some times the recommendations are not accepted, and that is this. The Government of India have now made it that 14 years is the minimum period of imprisonment for those who have been sentenced to death and thereafter, they have been commuted to lesser sentence, namely, imprisonment for life either by Courts or by the Government in exercise of its prerogative powers. That is answer No. 1.

My second answer is, certainly this Minister for Law will view with great sympathy and humanitarian consideration the cases of the two persons who have been there for nearly 14 or 15 or 16 years. So far as their parole is concerned, I request the Hon. Member Thiru Kittappa to pass on the two names to me, so that I can go ahead with complying with their request.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, லைஃப் சென்டன்ஸ் விதிக்கப்பட்டு சிறையில் இருப்பவர்களை ரெக்கமென்டேஷன் பேரில் சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள், சிலர் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். மேலும் ஜெயில் சம்பந்தமான பல்வேறு பிரச்சனைகளுக்காக ஜெயில் ரிஃபார்ம்ஸ் கமிஷனில் டர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்-ல் இதுவும் ஒன்று. மேலும் இந்தக் கமிஷனில் ரிபோர்ட் பெப்ருவரி 3-ம் தேதி அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று வரையிலும் அது வெளிவரவில்லை. இந்த ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படாததின் காரணம் என்ன ? எப்போது சமர்ப்பிக்கப்படும் ? எப்போது அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

(முற்பகல் 9—30)

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, the Commission is certainly giving its best and realy doing its work quite vigilantly and diligently. There is no difficulty about it. They have examined witnesses and written a few chapters. There is certain amount of want of assistance from the Psychatrist—World known, world reputed psychatrist—Professor Venkata Rao of

1979 மார்ச் 20]

Madurai Erskine Hospital—who is an expert member in the Commission often he goes abroad and other two members are absolutely handicapped in not getting necessary assistance in completing certain chapters. The term of office of the Commission has been extended only by two months. With the help and assistance, particularly from the Professor of Erskine Medical Hospital, the Commission will submit its report in about two months.

THIRU S.V. RAMASWAMY: Hon. Speaker, Sir, Would it be possible for the Government to consider the possibility of minimising the prescribed period of sentence in order to facilitate the convicts apply for suspension of the remaining period, as I personally feel that it is a major problem for the major convicts.

THE HON THIRU K. NARAYANASWAMY: The Government will consider well intentioned suggestions.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயுள் தண்டனை கைதிகளைப் பொறுத்தவரையில், நீதி மன்றங்களிலே ஆயுள் தண்டனை பெற்றவர்களை ஒரு பிரிவாகவும், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் கருணை மனு மூலம் அவர்கள் தூக்கிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை ஒரு பிரிவாகவும் வைத்து இரு பிரிவுகளாகக் கருதப்படுவதாகத் தெரிகிறது. எப்போது தூக்குத் தண்டனை இல்லையென்று சொல்லப்படுகிறதோ, அப்போது ஆடோமாடிக்காக ஆயுள் தண்டனை பெற்றவர்களாக ஆகிவிடுவதால், ஒரே பிரிவாக இருப்பதில் தயக்கம் என்ன? அவசர காலத்தில் பஞ்சாப் ஹை கோர்ட்டில் 14 ஆண்டுகளுக்கு மேல் ஆயுள் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டது. 'இட் இஸ் நாட் எ மேட்டர் ஆப் ரைட்' என்ற அளவில், அப்படி கிளைம் பண்ண முடியாது என்ற கருத்து அப்போது எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே மத்திய சர்க்கார் கைட்-லைன்ஸ் போட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அதையெல்லாம் ஒரே பிரிவாக செய்து அதாவது 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்ய முயற்சிக்குமா? அதற்கு எந்தச் சட்டம் மத்திய சர்க்காருக்கு இடையூறாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எந்தச் சட்டமும் குறுக்கே நிற்க வில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. மேற்கு வங்காள அரசும் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க, இந்த அரசாங்கத்தின் தயக்கத்திற்கு என்ன காரணம்? எனவே, 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள எல்லாக் கைதிகளையும் அவர்கள் ஆயுள் தண்டனை பெற்றவர்களாக இருந்தாலும், தூக்குத் தண்டனை பெற்றவர்களாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் அதையெல்லாம் பார்க்காமல், அவர்களை யெல்லாம் விடுதலை செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

அட்வைசரி கமிட்டி என்று ஒன்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் அட்வைசையே கேட்பதில்லை. அப்படியென்றால் அந்த அட்வைசரி கமிட்டி எதற்காக? அப்படி அட்வைஸ் கேட்பதில்லை என்ற நிலைமைக்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I am obliged to hon. Member, Thiru Suppu, for his nice discourse with which I am quite conversant, because of my experience both as lawyer and Judge.

May I read the instruction received from the Govenment of India? The Government of India requested that the State Government may consider to amend the jail manual so that the persons whose death sentence has been commuted to life should not be released unless they have completed 14 years of actual imprisonment. Accordingly this Government directed that a person whose death sentence has been commuted to life should go before the Advisory Board only after he has actually undergone 14 years of imprisonment. The Government of India have been requested to clarify whether the person who have been originally sentenced to life imprisonment or whose death sentence has been commuted to life by Government or by appellate courts should service 14 years of actual sentence. Their reply to the above clarification is awaited.

One more sentence, I would like to add. I personally see not much of rationale behind the person who have been originally sentenced to life imprisonment or whose death sentence has been commuted to life by Government or by appellate courts, in cases like cold blooded murder, brutal murder, heinous crimes, macabre offences. There are certain district judges - human nature being what it is, there are varieties of persons—who gave life sentences for such cases. As a judge I have cautioned some of the district judges also in the past. As there are death sentences provided for in the Statute Book, in deserving cases death sentences should be given. I have no compunction or regrets over them. I am not one who advocates abolition of death penalty. If the death penalty is abolished, there will be more and more political murders. I am one of those who advocated for the retention of death penalty in adequate, suitable and deserving cases alone and not in every case, but about cases of extenuating circumstances like sustained provocation or suspicion of fidelity of a wife or husband– I can give a number of cases—which constitute – what may be called – extenuation and mitigation of the crime in which case death sentence need not be awarded and life sentence can be given.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 485.....

திரு. சி. ஆறுமுகம் : முன் கேள்வியில் துணைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும். அது சிறைச்சாலை விவகாரம். நான் ஜெயிலுக்குப் போகக் கூடத் தயாராக இருக்கிறேன்.

1979 மார்ச் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைக் கட்டாயப் படுத்திக் கேட்க முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : எதிர்க்கட்சிகளுக்கு நேரப்படி எந்தக் காரியமும் நடக்கக்கூடாது என்று கருதுகிறீர்களா ? எங்களுக்கு எதிரே உள்ள கடிகாரத்தைக் காணோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அதைப் பற்றிச் சொன்னதன் பேரில் பழுது பார்க்க எடுத்துப் போயிருக்கிறார்கள். வேறு இரண்டு கடிகாரங்கள் இருக்கின்றன. திரும்பிப் பாருங்கள்.

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தார்).

நீதி மன்றங்களில் தமிழில் வழங்கப்படும் தீர்ப்புகள்

* வினா எண் 485—திரு. எஸ். வரதராஜன் திரு. எஸ். கணேசன் ; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோர்ட்டுகளில் தமிழில் வழங்கப்படும் தீர்ப்புகள் செல்லாது என்று அண்மையில் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) The High Court of Madras has set aside the judgment of a District Munsif on the ground that it was written in Tamil instead of in English, as Tamil has not yet been declared as the language for judgment in civil courts.

(*b*) Before declaring Tamil as the language for judgment in civil courts subordinate to High Court, the acts which are ordinarily used in civil courts have to be translated into Tamil. As soon as the Acts which are ordinarily used in civil courts are translated in to Tamil. Tamil shall be declared as the language for judgment in civil courts. At present, the State Official Langauge (Legislative) Commission is now translating the Acts which are ordinarily used before subordinate criminal courts.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : திரு. ஆறுமுகம் அவர்கள் முக்கியமான பிரச்சினையை எழுப்புகிறார். சபாநாயகர் வீட்டிலேயே. . . . . . .